தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் விரைவில் தொடங்கப்பட்வுள்ள "HEALTH WALK திட்டத்தின் கீழ் மதுரை ரேஸ்கோர்ஸ் பகுதியில் நேற்று (23.06.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் பொதுமக்கள் 8 கி.மீ நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்து உறுதிபடுத்துவதற்காக ஆய்வு மேற்கொண்டார்கள். உடன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மா.சௌ.சங்கீதா, மதுரை மாநகராட்சி மேயர் திருமதி இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையாளர் கே.ஜே.பிரவீன்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி (மதுரை வடக்கு), மு.பூமிநாதன் (மதுரை தெற்கு) உட்பட பலர் உள்ளார்கள்.

பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர் தலைமையில்

வேளச்சேரி மேற்குப் பகுதியில் கலைஞர் நூற்றாண்டு விழா அரங்கம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்து சிறப்புரை!

சென்னை, ஜூன் 24 -

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்குப் பகுதி சார்பில் முத் தமிழறிஞர் கலைஞர் அவர் களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிலேடை ஆதவனுக்கு சீர் மிகு அரங்கம் நிகழ்ச்சி இன்று (24.6.2023- சனிக்கி ழமை) மாலை 5 மணிக்கு 100 அடி சாலை, வேளச்சே ரியில் நடைபெறுகிறது.

வேளச்சேரி மேற்குப் பகு திச் செயலாளர் அரிமா சு. சேகர் தலைமை வகிக்கி றார். எஸ். முருகவேல், கே.என்.தாமோதரன், பொ.த.மதிவாணன், ஜி.பி. எஸ்.பாலசதிஷ், க.பாரதிதா சன், வி.சக்திவேல், த.பார்த் திபன், தே.கோபி ஆகி யோர் வரவேற்கின்றனர்.

மாமன்ற உறுப்பினர்கள் பெ.மணிமாறன், வேளச் சேரி எஸ்.பாஸ்கரன், வே. ஆனந்தம், மகேஸ்வரி முரு கவேல் மற்றும் சி.பழனி, பொ.த.எழில்வாணன், சே.மைதிலி, ந.டில்லிகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சிலேடை ஆதவனுக்கு சீர்மிகு அரங்கத்தில் முத்த மிழறிஞரின் புகழ் ஓங்கியி ருப்பது எழுத்தாற்றலிலா ? சொல்லாற்றலிலா? என்ற தலைப்பில் நடுவராக புல வர் இராமலிங்கம் பேசுகி றார்.

எழுத்தாற்றலிலே தலைப் பில் திமிரி சதாசிவம், பேரா. நாகை வேம்புபாலா பேசுகின்றனர். சொல்லாற் றலிலே என்ற தலைப்பில் முனைவர் நவஜோதி, பேரா. வேதநாயகி ஆகி யோர் பேசுகின்றனர்.

மாவட்டக் கழகச் செய லாளரும் மருத்துவம் மற் றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் அரங் கத்தை தொடங்கி வைத்து பேசுகிறார்.

நிகழ்ச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, துணை மேயர் மு.மகேஷ்கு மார், ஹசன் மௌலானா எம்.எல்.ஏ., ச.அரவிந்த்ர மேஷ் எம்.எல்.ஏ., காரம் பாக்கம் க.கணபதி எம். எல்.எ., பிரபாகரராஜா எம். எல்.ஏ., க.தனசேகரன், பாலவாக்கம் க.சோமு, ஆலப்பாக்கம் சண்முகம், காசிமுத்து மாணிக்கம், எஸ்.குணசேகரன், த.விஸ்வ நாதன், மு.மனோகரன், பா.வாசுகிபாண்டியன், ரத் னாலோகேஸ்வரன்,. கழக த.ரமேஷ், சி.பிரதீப், அஞ் சல்ராமன், ஜி.வரதன், கி. கண்ணன்,

பகுதி கழக செயலாளர் கள் துரைகபிலன், இரா. துரைராஜ், எம். கிருஷ்ணமூர்த்தி, கே.கண் ணன், எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், நொளம் பூர் வே.ராஜன் , துரை வீர மணி, ஜி.வெங்கடேசன், மு.இராச, மற்றும் ஆர்.பால சுந்தரம், பி.ஜெ.பாஸ்கர், எம்.ஸ்ரீதரன்,, சைதை ச.சம் பத், சைதை மா.அன்பரசன், உ.துரைராஜ் ,ப.ரவி, எஸ். டி.தங்கராஜ், வ.செல்வகு மார், எம். கே. ஏழுமலை, மின்னல் கந்தப்பன், த. பஷீர், அ.அரிகிருஷ்ணன், P.S.முருகேசன், எம்.விநாய கமூர்த்தி, சி.பரிமேலழகர், அடையார் சி.சுரேஷ், எ.கே.ஆனந்த், எஸ்.தீபக் சின்னா(எ)மணிகண்டன், சைதை சாதிக், வழக்கறிஞர் த.பாபு, பா.அருண்குமார், நா.மணிகண்டன், ,மருத்து வர் மஞ்சுளாதேவி ,வி. ராஜேஷ், அருணா வேலாயு தம், எஸ்.சந்தானம், ஆ.ச.ஸ்ரீகாந்த், கே.சி. வனஜா , அ.ரவிகிருஷ்ணன், ம.தமிழரசு, க.கணேஷ்கு மார், வி.எம்.டி.ராஜாரம ணன், மு.தனசேகர், பெ. ராஜி, ஆ.பாண்டியன், எஸ். ஜெயக்குமார், வி.பார்த்த சாரதி, சி.முருகன், வி.ஜி. மோகன், ஜெ.பவளவ ண்ணன், ஆர்.நாகராஜ், க. பாலாஜி, ஜெ.சீத்தாபதி, சி.மணிவண்ணன், எ.வி. ரங்கா, கே.ஆர்.பி.பாண்டி யன், என்.நேசன், வி.கோபா லகிருஷ்ணன், ஆ.வடிவே லன் உள்ளிட்ட பகுதி, வட்ட நிர்வாகிகள், அணிக ளின் நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

பகுதி துணைச் செயலா ளர் சங்கர் நன்றி கூறுகிறார்.

அசாமில் பெய்த கனமழைக்கு 5 லட்சம் பேர் பாதிப்பு!

கவுக்காத்தி,ஜூன்.24-

அசாமில் பெய்த கனம ழையால் ஏற்பட்ட வெள் ளத்திற்கு இதுவரை கிட்டத் தட்ட 5 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாநில பேரழிவு மேலா ண்மை ஆணையம் தெரி வித்துள்ளது.

இதுதொடர்பாக மாநில பேரழிவு மேலாண்மை ஆணையம் வெளியிட்ட தகவலில்,

அசாமில் பெய்த கனம ழைக்கு மொத்தம் 4,95,799 பேர் பாதிக்கப்பட்டுள்ள னர். மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமுல்பூர் மாவட்டத்தில் வியாழக்கிழமை ஒருவர் பலியாகியுள்ளார்.

பஜாலி மற்றும் தாராங் கில் பெரும்பாலும் வெள் ளத்தால் பாதிக்கப்பட்டுள் ளது. அந்த இரண்டு மாவட்டங்களிலும் 58 வரு வாய் வட்டங்களில் சுமார் 1,350 கிராமங்கள் உள்ளன. அவற்றில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியது.

சுமார் 14,035 பேர் மாநில அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட 162 நிவா ரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான உணவு, மருத்துவம் மற்றும் பிற அத்தியாவசிய பொருள் கள் வழங்கப்பட்டு வருகின் றன. மேலும், 4,091 ஹெக் டர் நிலங்களுக்கு மேல் வெள்ளத்தில் மூழ்கி யுள்ளது. இதுதவிர பாலங் கள், பள்ளிகள் மற்றும் வீடு கள் உள்ளிட்டவைகள் சேதம் அடைந்துள்ளன. இந்நிலையில், அடுத்த இரண்டு நாட்களுக்கு கனம ழைக்கான மஞ்சள் எச்சரிக் கையை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

கவரப்பேட்டையில்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி!

டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருவள்ளூர், ஜூன் 24

திருவள்ளூர் மாவட் டம், கும்மிடிப்பூண்டி தொகுதி கவரப்பேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் சார்பில் கிராம மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 63 லட்சம் திட்ட மதிப்பில் காசோலைகளை மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந் தராஜன் வழங்கி சிறப்புரையாற்றினார்.

பதிமூன்று சுய உதவி குழுக்களுக்கு தலா ரூபாய் 3 லட்சம் தொழில் செய்வ தற்கான காசோலைகளை யும், 20 மகளிர் சுய உதவிக் கு ழு க்க ளு க்கு ம் உறுபினர்கள் சுய தொழில் செய்யும் வகையில் பசு மாடுகளும், 5 ஆடுகளும் வ ழ ங் கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர் கணபதி, ஊராட்சி மன்ற தலைவர் கே.ஜி.நமச்சிவாயம், மாவட்ட பொருளாளர் எஸ்.ரமேஷ், ஒன்றிய செய லாளர் பா.சுகுமாறன், மாணவரணி வெற்றி (எ) ராஜேஷ், புருஷோத்தமன், சுரேஷ், பிரபு, மாவட்ட இளைஞர் அணி கே.வி. லோகேஷ், சோம்பட்டு தன கோட்டி, ரவிச்சந்திரன், உள்ளிட்ட நிர்வாகிகள் பங் கேற்றனர்.

திருவள்ளூர் அருகே புட்லூர் ஏரியில் மீன்கள் செத்து மிதப்பதால் துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்ததின் பேரில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி நேரில் ஆய்வு செய்தார். சுத்தப்படுத்தி மீன்களை அகற்றவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். துணை இயக்குனர் ரூபேஷ்குமார், ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன், ஒன்றிய குழு துணை தலைவர் எம்.பர்க்கத்துல்லாகான், பொதுகுழு உறுப்பினர் த.எத்திராஜ், நிர்வாகிகள் டி.எம்.ராமச்சந்திரன், கே.கே.சொக்கலிங்கம், சதிஷ்குமார், சௌந்தரராஜன், கே.ஏ.அபினேஷ், அருண் கீதன், விஜயனதன், லாசர், தினேஷ், மகிமைதாஸ், உள்பட அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆகியோர் நேற்று (23.06.2023) திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வரபெற்ற பலமாற்று பொன் இனங்களில் பயன்படாத பொன் இனங்களை உருக்கி சுத்த தங்கக் கட்டிகளாக மாற்றி தங்க முதலீட்டு பத்திரத்தில் முதலீடு செய்யும் வகையில் 211 கிலோ எடையுள்ள பிரித்தெடுக்கப்பட்ட பலமாற்று பொன் இனங்களை உயர்நீதிமன்ற நீதியரசர் (ஓய்வு) செல்வி ஆர். மாலா அவர்கள் முன்னிலையில் பாரத ஸ்டேட் வங்கி பொது மேலாளர் கோவிந்த் நாராயண் கோயல் அவர்களிடம் ஒப்படைத்தனர். உடன் இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ. குமரகுருபரன், ஆணையர் க.வீ முரளீதரன், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் இரா.அருள் முருகன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

2023-24ஆம் ஆண்டில் முன்னெடுக்க வேண்டிய

வனப் பாதுகாப்பிற்கான வளர்ச்சித் திட்டப் பணிகள்!

அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அலுவலர்களுடன் ஆய்வு!

சென்னை, ஜூன் 24-

சென்னை, கிண்டி வனத் துறை முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர் அலுவ லக கூட்ட அரங்கில் நேற்று (23.06.2023) வனப்பாது காப்பிற்காக மேற்கொள் ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் முன்னேற் றம் குறித்து வனத்துறை அமைச்சர் டாக்டர். மா. மதிவேந்தன் அலுவலர்களு டன் ஆய்வு மேற்கொண் டார்.

இந்த ஆய்வுக்கூட்டத் தில் வன உயிரின மனித மோதல்கள் தடுப்பு நிவார ணமாக கடந்தாண்டு ரூ.8.65 கோடியும், நடப் பாண்டு ரூ.10 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உடனுக்குடன் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மரகத பூஞ் சோலை திட்டத்தில் கடந் தாண்டு ரூ..4.79 கோடியும், நடப்பாண்டு ரூ.8.78 கோடி யும் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு பணிகள் நடை பெற்று வருகின்றன.

வனப் பாதுகாப்பு படை நவீனமயமாக்கல் பணிக ளுக்கு ரூ.6.29 கோடி வழங் கப்பட்டுள்ளது. மத்திய மாநில அரசு மூலம் புலிகள் காப்பகம் மேம்பாட்டு பணிகளுக்கு ரூ.10.26 கோடியும், வனச் சாலைகள் மேம்பாட்டிற்கு ரூ.5.41 கோடியும் வழங்கப்பட்டுள் ளது. கிண்டி குழந்தைகள் பூங்கா ரூ.17 கோடி மதிப் பீட்டில் புதுப்பிக்கும் பணி கள் தொடங்கப்பட் டுள்ளன.

மேலும், தேவாங்கு சர ணாலயம், புதிய பறவைகள் சரணாலயம் அமைக்கும் பணிகள், காவேரி வன உயி ரின காப்பகம், சூழல் சுற் றுலா மேம்பாட்டுப் பணி கள் மற்றும் நீலகிரி வரையாடுகள் காப்பகம் ரூ.25 கோடி மதிப்பில் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியின் மூலம் காலநிலை மாற்றத் திற்கான தமிழ்நாடு உயிர்ப் பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் 2022-23-ம் ஆண்டு முதல் 2029-30 வரை எட்டு ஆண் டுகளுக்கு ரூ.920.52 கோடி மதிப்பில் செயல்படுத்தப்ப டுவதனையும் வனத்துறை அமைச்சர் ஆய்வு மேற் கொண்டார்.

தமிழ்நாடு பசுமை இயக் கத்தின் மூலம் நடைபெற்று வரும் 33 சதவீத பசுமை பரப்பை உயர்த்துவதற் கான திட்டங்கள், ஈரநில மேம்பாட்டுப் பணிகளை யும் அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

மேற்கானும் திட்டங்களின் கீழ் 2022-23-ஆம் ஆண்டில் மேற்கொள் ளப்பட்ட பல்வேறு திட் டப்பணிகள் மற்றும் 2023-24ஆம் ஆண்டில் முன் னெடுக்க வேண்டிய நடவ டிக்கைகள் குறித்து அமைச் சர் அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கினார்.

தமிழ்நாடு காவல்துறை சார்பில்

பெண் குழந்தைகளை காக்கும் 'இமைகள் திட்டம்' அறிமுகம்!

சென்னை,ஜூன்.24-

தமிழ்நாடு காவல்துறை வடக்கு மண்டலம் சார்பாக பாலியல் குற்றங்களிலிருந்து பெண் குழந்தைகளை காக் கும் 'இமைகள் திட்டம்' அறிமுகம் செய்யப்பட்டுள் ளது. இத்திட்டத்தின் மூலம் பாலியல் குற்றங்களில் இருந்து பெண் குழந்தைகளை பாதுகாக் கும் வகையில் காவல்துறை மற்ற அரசு துறைகளுடன் இணைந்து செயல்பட நிலையான இயக்கமுறை (Standard Operating Procedure) உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பெண் மூலம் குழந் தைகளுக்கு எதிரான பாலி யல் குற்றங்களை முறை யாக வழக்கு பதிவு செய்வது, முனைப்புடன் புலன் விசாரணை செய்வது, 60 நாட்களில் குற்ற பத்தி ரிக்கை தாக்கல் செய்வது, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு மற்றும் மறு வாழ்வு ஏற்பாடு செய்வது, அவர்களின் சட்டப்படி யான பாதுகாப்பை உறுதி செய்வது, போன்றவை உறுதி செய்யப்படும்.

மேலும், மருத்துவர்கள் மூலம் பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கு விரைவான சிகிச்சை அளித்து மனநல ஆலோச னையும் வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் பள் ளிகல்லூரி மாணவர்களு டன் கலந்துரையாடல், தெரு நாடகங்கள், துண்டு பிரசுரங்கள் மூலம் விழிப்பு ணர்வு செய்து பெண் குழந் தைகளை காவல்துறை எனும் இமைகள் காக்கும். நேற்று (23.06.2023) தமிழ் நாடு காவல்துறை தலைமை இயக்குனர் செ. சைலேந்திர பாபு, இத்திட்டத்தை துவங்கி வைத்தார்கள். வடக்கு மண்டல ஐ.ஜி கண் ணன், வடக்கு மண்டலத் தைச் சேர்ந்த காவல்துறை துணைத் தலைவர்கள் மற் றும் மாவட்ட காவல் கண் காணிப்பாளர்கள் உடனி ருந்தனர்.

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி

வழக்கறிஞர் அணி: சி.ஜெய்கணேஷ் மறைவு!

கழகத்தினர் - வழக்கறிஞர்கள் அஞ்சலி!

சென்னை, ஜூன் 24-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி திமுக கழக வழக்கறிஞர் அணி துணை அ மை ப் பா ள ர் சி.ஜெய்கணேஷ் நேற்று (23.06.2023) வெள்ளிக்கி ழமை காலை 10 மணி அள வில் சாலை விபத்தில் மறை வெய்தினார் என்பதனை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி 113 வது அவட்டம், நுங்கம்பாக்கம், கிராம தெரு, கதவு எண் 21 இல் வசித்து வரும் கழகத் தின் மூத்த முன்னோடி முன் னாள் பகுதி பிரதிநிதி சிகா மணி புதல்வரும் ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதியின் வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளருமான வழக்க றிஞர் சி.ஜெய்கணேஷ் அவர்கள் நேற்று காலை சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலை வானகரம் அருகில் தனது மனைவியு டன் திருவேற்காட்டில் நடைபெற்ற உறவினர் இல் லத் திருமணத்தில் பங் கேற்று விட்டு தனது இரு சக்கர வாகனத்தில் வீடு திரும்பி வந்து கொண்டிருந் தபோது ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார்.

விபத்தில் காயமுற்ற அவ ரது மனைவி மருத்துவம னையில் சிகிச்சை பெற்று வருகின்றார். அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (24.06.23) மதியம் 1.30 க்கு மயிலாப்பூர் ஹெல் பெத்த மாதா தேவாலய கல்லறை யில் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கின் றோம்.

அன்னாரின் உடலுக்கு கழக மூத்த முன்னோடி களும் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் மற் றும் கழக வழக்கறிஞர் அணியினர் பெருந்திரளாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட வழக்கறி ஞர் அணி அமைப்பாளர் பெ.ரகு தெரிவித்தார்.

சென்னை தென் மேற்கு மாவட்ட தி.மு.க.

பகுதி கழக இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான விண்ணப்பங்கள்!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஜூன் 24

சென்னை தென்மேற்கு மாவட்ட திமுக மயிலாப்பூர், தியாக ராயநகர் இளைஞர் அணி பகுதி கழகங்களுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் சி.பி. ராமசாமி சாலையில் உள்ள அலுவலகத்தில் இன்று 24.06.2023 (சனிக்கி ழமை) காலை 10.00 முதல் விண்ணப்பம் படிவங்கள் வழங்கப்ப டுகிறது. படிவங்களை பெற்று அதனை |உரியஆவணங்களுடன் பூர்த்தி செய்து வருகின்ற 30.06.2023 (வெள்ளிக்கிழமை) அன்று மாலைக்குள் விண்ணப்பம் பெறப்பட்ட அலுவலகத்தில் ஒப்ப டைக்க வேண்டும்.

பகுதி கழகங்களில் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் 35 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண் டும். கல்விச் சான்றிதழ் நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல், ஆதார் அட்டை நகல், உள்ளிட்ட ஆவணங்களை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். வண்ண புகைப்படம் (பாஸ்போட் அளவில் விண்ணப்பத்தில் ஒட்டப்பட வேண் டும்.

ஏற்கனவே இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய அமைப்பாளர்களும் அமைப் பாளர், துணை மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வரவிரும்பினால், அவர்களும் அவ சியம் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாகவும், முழுமையாகவும் நிரப்பவேண்டும்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ.

செயலாளர்

சென்னை தென்மேற்கு மாவட்டம்

திருவள்ளூர் மாவட்டம் காக்களூர் ஆவின் பால்பண்ணை வளாகத்தை தமிழ்நாடு பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் அசோகன், ஆவின் பொது மேலாளர் ஜி.ரமேஷ் குமார், துணைப் பதிவாளர் (பால்வளம்) சித்ரா, உதவி பொது மேலாளர் சொர்ணகுமார், உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலர் மரு.சந்திரபோஸ், ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ், உள்பட பால்வளத் துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பால்வளத் துறை அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர் .